பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை- 4

**05.06.2024** **6.30 PM** **WENDESDAY**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மத்தியில் புதிய அரசு அமைப்பதற்கு ஏதுவாக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவையின் ராஜினாமாவை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஏற்றுக்கொண்டுள்ளார்.

- தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்கள் இன்று புதுதில்லியில் கூடி, புதிய அரசு அமைப்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

- **I N D I** கூட்டணி கட்சி தலைவர்களும் இன்று கூடி தங்களது செயல்திட்டம் குறித்து ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

- தமிழகத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அஷ்வினி பொன்னப்பா – தனிஷா கிராஸ்டோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்திற்கு பின் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து 17-ஆவது மக்களவையை கலைப்பதற்கான பரிந்துரையை அளித்தார்.

புதிய அரசு அமைவதற்கு ஏதுவாக தாமும், தமது அமைச்சரவை சகாக்களுக்குமான ராஜினாமா கடிதங்களை அவர் அளித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட குடியரசுத் தலைவர் புதிய அரசு அமையும் வரை பொறுப்பில் நீடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மத்திய அமைச்சர்களுக்கு இன்றிரவு குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விருந்தளிக்கிறார்.

குடியரசுத் தலைவரை சந்தித்தபின் பிரதமர் திரு நரேந்திர மோடி, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கரையும் சந்தித்து பேசினார்.

<<<<<<<>>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்களின் கூட்டம் பிரதமர் திரு நரேந்திர மோடி இல்லத்தில் இன்று மாலை நடைபெற்றது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் மூன்றாவது முறையாக புதிய அரசை அமைப்பதற்கான செயல்திட்டங்கள் குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டது.

இதில் தெலுங்கு தேசம் கட்சித்தலைவர் திரு சந்திரபாபு நாயுடு, ஐக்கிய ஜனதாதள தலைவரும், பீகார் முதலமைச்சருமான திரு நிதிஷ்குமார், லோக் ஜன்சக்தி கட்சியின் ராம்விலாஸ் பிரிவின் தலைவர் திரு சிராக் பாஸ்வான் மற்றும் இக்கூட்டணியில் இடம்பெற்றுள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் இடம்பெற்றிருந்தனர்.

இக்கூட்டத்தில், தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் மத்தியில் புதிய அரசு அமைப்பதற்கான ஆதரவு கடிதங்களை வழங்கியுள்ளனர்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமைவதற்கு மேலும் பத்து சுயேட்சை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆதரவு கடிதங்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்றே குடியரசுத் தலைவரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, **‘I N D I’** கூட்டணி கட்சி தலைவர்களின் ஆலோசனைக்கூட்டம் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இல்லத்தில் தொடங்கியுள்ளது.

அனைத்து கூட்டணித் தலைவர்களையும் திரு கார்கே வரவேற்றார்.

தங்களது கூட்டணியின் அணுகுமுறை மற்றும் செயல்பாடுகள் குறித்து தலைவர்கள் விவாதித்து வருகின்றனர்.

<<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் தாம் வகித்து வந்த துணை முதலமைச்சர் பதவியை திரு தேவேந்திர பட்நாவிஸ் ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

பிஜேபி-யின் மூத்த தலைவரான திரு பட்நாவிஸ், மக்களவைத் தேர்தலில் தமது கட்சியின் வெற்றி திருப்திகரமாக அமையாததற்கு தார்மீக பொறுப்பேற்று இம்முடிவை எடுத்துள்ளதாக கூறியுள்ளார்.

தமது முழு நேரத்தையும் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலுக்காக பயன்படுத்தப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 2019 தேர்தலில் மகாராஷ்ட்ரா மாநிலத்தில் பிஜேபி 27 புள்ளி எட்டு நான்கு சதவீத வாக்குகளை பெற்றதாகவும், ஆனால் தற்போது நடந்து முடிந்த தேர்தலில், 26 புள்ளி ஒன்று எழு சதவீதம் வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

2019-ல் 23 மக்களவைத் தொகுதிகளில் வெற்றிபெற்ற பிஜேபி, தற்போது ஒன்பது இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளதையும் திரு தேவேந்திர பட்நாவிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அம்மாநில முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே செய்தியாளர்களிடம் பேசுகையில், திரு தேவேந்திர பட்நாவிஸின் முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

காயிதே மில்லத்தின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமிழ் மொழிக்காகவும், மத நல்லிணக்கத்திற்காகவும் பாடுபட்டவர்காயிதே மில்லத் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்நாளையொட்டி, சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள காயிதே மில்லத் நினைவிடத்தில் அஇஅதிமுக சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

<<<<<<<>>>>>>

உலக சுற்றுச்சூழல் தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை, வளங்கள் அழிப்பு உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்துவதற்காகவும், பன்முக உயிரி பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கிலும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி நாடு முழுவதும் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றன.

தமிழகத்திலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சுற்றுச்சூழலையும், வளங்களையும் பாதுகாப்பது அவசியம் என்று மாநில சுற்றுச்சூழல் துறை கூடுதல் தலைமை செயலாளர் திருமதி சுப்ரியா சாஹூ தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - சுப்ரியா சாஹூ - 52 செகண்ட்ஸ்)*

இந்நாளையொட்டி, விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் பணியினை மாவட்ட ஆட்சியர் திரு பழனி தொடங்கிவைத்தார்.

திருவள்ளுர் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் தின விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் திரு பிரபுசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

அரக்கோணம் பேரிடர் மீட்புப்படை வளாகத்தில் 500-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன.

செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் ஒன்றியத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடும் விழா மற்றும் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சியும் இன்று நடைபெற்றன.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 48 செகண்ட்ஸ்)*

இதனிடையே, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இன்று மாலை ஒரு மணிநேரத்திற்கும் மேலாக கனமழை பெய்தது.

இதன் காரணமாக சென்னை விமான நிலையத்தில், விமான சேவைகள் பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - செங்கல்பட்டு சுரேகா – 50 செகண்ட்ஸ்)*

இந்நிலையில், ராணிப்பேட்டை, தருமபுரி, மதுரை ஆகிய மாவட்டங்களிலும் இன்று பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருப்பத்தூர் மாவட்டத்தில் மக்களவைத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், ஆட்சியர் திரு தர்பகராஜ் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டது.

-----------------

சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில், பொதுமக்கள் குறைதீர் முகாம் இன்று நடைபெற்றது.

----------------

நெல்லை மாவட்டம் பாபநாசம் அணையிலிருந்து கார்பருவ சாகுபடிக்காக இன்று தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அஷ்வினி பொன்னப்பா – தனிஷா கிராஸ்டோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---------------

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் வைதேசி சௌத்ரி - ஸ்ரீவல்லி ராஷ்மிகா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------------

உலகக்கோப்பை டிவெண்டி - டிவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

நியூயார்க்கில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<<END>>>>>